**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திட்டக்குடி**

முன்னிலை : திரு. ஆசிப் முகமது, பி.ஏ., எல்.எல்.பி,.(Hons)

குற்றவியல் நீதித்துறை நடுவர், திட்டக்குடி

**2026 ஆம் ஆண்டு, ஜுன் திங்கள் 25-ஆம் நாள் வியாழக்கிழமை**

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.159/2023

CNR NO.TNCD 23-001648-2023

| | | |
|---|---|---|
| 1. | Serial Number of the Case | **Calendar Case No: 159 of 2023** |
| 2. | Name of the Complainant & Address | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், இராமநத்தம் காவல் நிலையம், குற்ற எண். 20/2023 |
| 3. | Name of Accused & Address | ராஜேந்திரன், த/பெ. பொன்னுசாமி, தெற்குத் தெரு, தச்சூர் கிராமம், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம், |
| 4. | Offence complained pf | offences u/s. 294(b), 323, 506(1) IPC and sec.4 of TNPHW Act |
| 5. | Date of Offence | 19.01.2023 |
| 6. | Date of Complaint | 21.01.2023 |
| 7. | Plea of the Accused and his Examination in Brief | Pleaded not guilty. |
| 8. | Apprehension | AB |
| 9. | Released on bail | -- |

| | | |
|---|---|---|
| 10. | Commencement of trial | 10.12.2024 |
| 11. | Close of trial | 25.06.2026 |
| 12. | Judgment Reserved on | 25.06.2026 |
| 13. | Judgment Pronounced on | 25.06.2026 |
| 14. | Sentence or Order | அ) இவ்வழக்கின் எதிரி பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் தொல்லைத் தடுப்புச்சட்டம் மற்றும் பிரிவுகள் 294(பி), 323, 506(1) இதசவின் படி குற்றவாளி இல்லை யென தீர்வு கண்டதால் எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.<br>ஆ). இவ்வழக்கில் உத்திரவிடு வதற்கான வழக்கு சொத்து எதுவுமில்லை. |
| 15. | Explanation of Delay | Nil |
| 16. | Remarks | Nil |

**As per order of Hon'ble High Court, Madras in ROC No.814/2020/RG/F1(P.Dis.No.36/2021)**

**dated 07.04.2021 the case summary is detailed below**

| **Sl.No** | **CASE SUMMARY** | | | |
|---|---|---|---|---|
| i). | The period of remand of the accused | Name of the accused | Date of Remand | Release on Bail |
| | | Rajendiran | -- | Released on Anticipatory bail |
| ii). | Date of filing of the complaint/ final report in the court | Filing of Complaint 21.01.2023 | Filing of Final report 06.12.2023 | |

| | | | | |
|---|---|---|---|---|
| iii). | Date of committal of the cases to the Court of Sessions | Nil | | |
| iv). | Date of questioning of the accused under section 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be; | on 10.12.2024 | | |
| v). | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions under Section 317 of the Code; | Crl.M.P.No. | Date of filing | Result |
| | | - | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| vi). | Date of Examination in chief and Cross | Name of the Witness | Date of Chief | Date of Cross |
| | | அ.சா.1-திருமதி. லட்சுமி | 03.06.2025 | 03.06.2025 |
| | | அ.சா.2- திருமதி. ரஞ்சிதா | 03.06.2025 | 03.06.2025 |
| | | அ.சா.3 திருமதி. சுமதி | 03.06.2025 | 03.06.2025 |
| | | அ.சா.4 திருமதி. பொன்னம்மாள் | 03.06.2025 | 03.06.2025 |
| | | அ.சா.5 திரு. பாண்டியன் | 22.07.2025 | -- |
| | | அ.சா.6 திரு. ராஜமாணிக்கம் | 22.07.2025 | -- |
| | | அ.சா.7 திரு. அய்யப்பன் - மருத்துவர் | 09.06.2026 | 09.06.2026 |
| | | அ.சா. 8 கலியமூர்த்தி - உதவி ஆய்வாளர் | 09.06.2026 | 09.06.2026 |

| | | |
|---|---|---|
| vii | Date of examination of the accused under section 313 of the code | 19.06.2026 |
| viii | Details of abscondance of an accused and his appearance production as the case may be; and | NIL |
| ix | Grant of stay by superior courts and the results there of | NIL |

இவ்வழக்கானது 06.12.2023 தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டும் அரசு உதவி வழக்கறிஞர் திருமதி. என். இந்திரா அவர்கள், முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. மணிவண்ணன், அவர்கள் முன்னிலையாகியும், இந்நாள் வரை நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இந்நீதிமன்றம் இன்று 25.06.2026 வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

**<u>1. அரசு வழக்கின் சராம்சம்</u>**

இராமநத்தம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தச்சூர் கிராமத்தைச் சேர்ந்த இவ்வழக்கின் சாடசி -1 லட்சுமி என்ப்வருக்கும் அவரது கொழுந்தனாரான எதிரிக்கும் இடம் சம்மந்தமாக பிரச்சினை கடந்த 8 வருடங்களாக இருந்து வந்தநிலையில் முன் விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு 19.01.2023-ம் தேதி காலை 10.00 மணிக்கு சாட்சி -1 ஆனவர் அவரது வீட்டின் அருகில் நின்றுக்கொண்டிருந்தபோது சாட்சி -1 -ஐ

பெண் என்றும் பாராமல் பெண்மையை மானபங்கம் படுத்தும் வகையில் சாட்சி -1 ஐப் பார்த்து ஏய் புண்ட ஏண்டி இங்க நிக்குற என்று அசிங்கமாக திட்டியும் எனக்கு தாண்டி இந்த இடம் சொந்தம் என்று அவரது மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்து சாட்சி -1 னக் வலது கால் பாதத்தில் மோதியும் வலது கண்ணில் ஓங்கி அரைந்து சா ்சி -1 க்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், சாட்சி -1 ஐப் பார்த்து நீ இந்த இடத்துக்கு பக்கம் வந்தினா உன்னை அடித்தே கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும் எதிரியானவர் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் தொல்லைத் தடுப்புச் சட்டம் பிரிவு -4 -ன் படியும் தண்டிக்கத்தகுந்த குற்றம் புரிந்துள்ளார் என்று இராமநத்தம் காவல் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை 21.01.2023-ஆம் தேதி பதிந்து பின்பு புலன் விசாரணை முடிக்கப்பட்டு குற்ற இறுதி யறிக்கை 06.12.2023- ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட இறுதியறிக்கையானது இந்நீதிமன்றத்தில் பரிசீலனை செய்யப்பட்டு 294(பி), 323, 506(1) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் தொல்லைத் தடுப்புச் சட்டம் பிரிவு -4 -ன் கீழான தண்டிக்கத்தகுந்த குற்றங்களுக்காக எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி குற்ற வழக்கு விசாரணை மேற்கொள்ள போதுமான காரணங்களும், முதல் நோக்கு வழக்கும் அமைந்துள்ளதாக குற்ற விசாரணை நடைமுறைத் தொகுப்பு பிரிவு 190(1)(b) கீழ் இந்நீதிமன்றக் கருத்தில் புலன் கொள்ளப்பட்டு இவ்வழக்கானது 06.12.2025 ஆம் தேதி பிடியாணை வழக்காக

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 159/2023 என இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்ய உத்தரவிடப்பட்டது.

**3. வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்குதல்**

எதிரி 06.12.2024-ஆம் தேதி இந்நீதிமன்றம் முன்னிலையானதும், எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் இலவசமாக அளிக்கப்பட்டுள்ளது.

**4. முதல் வினா**

எதிரி மீண்டும் 10.12.2024-ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான போது பா.ந.சு.ச. பிரிவு 281 -ன் கீழ் குற்ற சாராம்சத்தை விளக்கி கூறி வினவியபோது எதிரி வழக்கை பொய் வழக்கு என்றும், தான் குற்றவாளி இல்லை என்றும் வழக்கை மறுத்துள்ளார். கீழ்கண்டவாறு குற்றச்சாட்டு வனையப்பட்டு இருதரப்பும் கேட்கப்படுவதற்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டது.

**5. குற்றச்சாட்டுக்களின் விபரம்**

| |
|---|
| தமிழ்நாடு பெண்கள் தொல்லைத்தடுப்புச் சட்டம் பிரிவு 4 மற்றும் 294(பி), 323, 506(1) இதச |

6. அரசுத் தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சியோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தவில்லை.

**7), அரசுத் தரப்பு சாட்சிகளின் மூலம் தெரியவரும் அரசுத் தரப்பு சாட்சியச் சுருக்கம்**

அ) லட்சுமி தனது சாட்சியத்தில் கடந்த 2023 ம் வருடம் தை போயி ஆறுமாதம் கழித்து காலை 10.30 மணிக்கு என் வீட்டிற்கு முன்னால் நின்றுகொண்டிருந்தேன் அப்போது ஆஜர் எதிரி ராஜேந்திரன் அங்குவந்து மான நஷ்டமாக உணக்கு எங்கடி சொத்து போட்டு நொட்டுது என பேசியவுடன் எனக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. அதில் எனக்கு நெஞ்சு மாரடைப்பு வந்துவிட்டது உடன் என்னை முதலில் திட்டக்குடி அரசுமருத்துவமனைக்கும், பின்னர் மேல் சிகிச்சைக்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கும் அழைத்துச்சென்றுவிட்டனர். போலிஸார் அங்கு வந்து என்னை விசாரித்தனர் நான் நடந்ததைசொன்னேன் என்றும், பின்னர் மூன்று, நான்கு நாட்கள் கழித்துபோலிஸார் வந்தனர். என் மருமகளையும் அம்மா அம்மா என்று பேசினார். தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணமான புகார் வாக்குமூலம் நான்கொடுத்ததுதான் என் கணவர் பெயர் தங்கராசு வாக்குமூலத்தில் உள்ள லட்சமி என்ற பெயர் என்னுடையதுதான் அது நான்தான்போட்டேன். கையொப்பத்துடன் கூடிய புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 ஆகும். ஆஜர்எதிரிதான் என்னுடைய வலது கண்ணில் அடித்தார் பிறகு ஆப்பரேஷன் செய்தேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

ஆ*)* அ.சா.*2* ரஞ்சிதா தனது சாட்சியத்தில் கடந்த *2023* ம் வருடம் பொங்கள் முடிந்து நான்கு நாட்களுக்கு பிறகு காலை *10.00* மணிக்கு தெருவில் சவுண்டு கேட்டு

வீட்டிலிருந்து நான்வெளியே வந்து பார்த்தபோது ஆஜர் எதிரி ராஜேந்திரன் வந்து எனது மாமியாரை மானபங்கமாக அதாவது தேவடியா, குச்சிகாரி எனது மாமியாரை திட்டி இந்த இடம் எனக்குத்தான் சொந்தம் எழுதி கொடுத்துவிடுங்கள் இல்லை என்றால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். பின்னர் எனது மாமியாரை கையால் வலது கண்ணில் அடித்தார் என்றும், பின்னர் பைக்கால் எனது மாமியாரின் வலது காலில் இடித்தார் நான் உடன் ஏன் இப்படி பன்னுகிறீர்கள் என்று அவரிடம் கேட்டபோது என்னையும் நெற்றியில் தள்ளி அடித்தார் என்றும், மீண்டும் சொத்து எனக்குத்தான் என்று சொல்லி தகராறுசெய்தார். உடன் எனது மாமியாரை முதலில் திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கும், பிறகு பெரம்பலூர் அரசுமருத்துவமனைக்கும் அழைத்துச்சென்றோம். எனதுமாமியாருடன் எனது மாமினாரை அங்கு விட்டுவிட்டு வந்தேன். எனது மாமியார் புகார்வாக்குமூலம் கொடுத்தார் என்றும், போலிஸார் என்னை விசாரித்தனர். சம்பவத்திற்கு பிறகும் அன்றைய தினமே இரவு *10.00* மணிக்கு நானும், என்னுடன் என் ஒப்படியாரும் வீட்டில் இருந்தபோது ஆஜர்எதிரி தண்ணியை போட்டுக்கொண்டு வந்து *10* பேருடன் வந்து வெளியே இப்படி வாங்கடி என்று திட்டி மிரட்டினார் என்று சாட்சியமளித்துள்ளார்.

இ) அ.சா. *3* சுமதி த னது சாட்சியத்தில் கடந்த இரண்டு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் நான் என் வீட்டில் இருந்தபோது காலை *10.00* மணிக்கு நாங்கள்

எல்லோரும் இருந்தோம். அப்போது எங்கள் வீட்டை தாண்டிதான் இரண்டு வீடு தள்ளி எதிரி ராஜேந்திரன் வீடு உள்ளது அங்கு சத்தம் கேட்டது அங்கு நான் உடன்போனேன். நான்போனபோது எதிரி ராஜேந்திரன் ரஞ்சிதாவை அடித்துக்கொண்டிருந்தார். நான் சம்பவத்தை விலக்கிவிட்டுவிட்டு வீட்டிற்கு சென்றேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிஸார் என்னை விசாரித்தனர்.

ஈ) அ.சா.4 பொன்னம்மாள் தனது சாட்சியத்தில் நான் தட்சூர் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். அசா.1 லட்சுமி, அசா.2 ரஞ்சிதா, அசா.3 மற்ற பட்டியல் சாட்சிகள் 5, 6 வரையுள்ளவர்கள் மற்றும் ஆஜர் எதிரியை தெரியும். கடந்த தை மாதம் இரண்டு வருடத்திற்கு முன்பாக நான்கு நாட்கள் கழித்து அசா.1 லட்சுமிக்கும் எதிரி ராஜேந்திரனுக்கும் சண்டை நடந்தது. மாலை 4.00 மணி இருக்கும் அப்போது நான் விலக்கி விட்டேன். மேற்ச்சொன்ன இருவரும் சண்டை போட்டுக்கொண்டார்கள் என்றும், வேறுஎதுவும் தெரியாது என்றும், போலிஸார் என்னை விசாரித்தனர் சாட்சியமளித்துள்ளார்.

உ) அ.சா.5 பாண்டியன் தனது சாட்சியத்தில் எனக்கு இது சமபந்தமாக எதுவும் தெரியாது, சுமாராக ஒன்றரை வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நான் வடக்கு தெருவில் இருந்து தெற்கு தெருவில் உள்ள செட்டியார் கடைக்கு மாலை 4.00 மணியிலிருந்து 4.30 மணிக்குள் வந்தேன் அப்போது போலிசார் என்னிடம் ஒரு கையொப்பம்

கேட்டார்கள் எதற்கு என்று கேட்டேன் ஒன்றும் பிரச்சினை இல்லை நீ ந்த ஊர்தானா என்று கேட்டதற்காக கையொப்பம் வாங்கியதாக கூறினார்கள் என்றும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான் என்றும், கையொப்பம் அ.சா.ஆ.2 என்றும், கையொப்பம் போட்ட பேப்பரை படித்துப்பார்க்கவில்லை போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

ஊ) அ.சா.6 ராஜமாணிக்கம் எனக்கு இ து சம்மந்தமாக எதுவும் தெரியாது பார்வை மகசரில் உள்ள எந்த கையொப்பமும் என்னுடையது அல்ல போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார்.

எ) அ.சா.7 மருத்துவர் அய்யப்பன் தனது சாட்சியத்தில் இந்த வழக்கு சம்பவத்தின்போது நான் திட்டக்குடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். கடந்த 19.01.2023 அன்று மதியம் 1.30 மணியவில் நான் மருத்துவமனையில்பணியில் இருந்தபோது கடலூர் மாவட்டம் திட்டக்குடியை சேர்ந்த தங்கராசு மனைவி லட்சுமி என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார் அவரை அவரது மருமகன் ராமமூர்த்தி சிகிச்சைக்கு அழைத்துவந்தார் அவரை நான் விசாரணைசெய்தபோது 19.01.2023 அன்று காலை 10.00 மணியளவில் அவருடைய வீட்டில் அருகே அடையாளம் தெரிந்த ஒரு ஆண் நபர் தன்னை குச்சியால் அடித்ததாக என்னிடம் கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தேன் அவருக்கு இடது கையில் வலியும், நெஞ்சுவலியும் இருப்பதாக கூறினார். பார்வை மங்கலாக

இருப்பதாக கூறினார். நான் அவரை பரிசோதனை செய்து மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்தேன். மேலும் பரிசோதனை செய்ய நெஞ்சு பகுதியில் வலி இருப்பதாக கூறியதால் நான் அவரை ஸ்கேன் எடுக்க பரிந்துரை செய்தேன். அவருக்கு முதல் உதவி அளிக்கப்பட்டு விபத்து பதிவேட்டில் பதிவுசெய்தேன். அவர் மேல் சிகிச்சை செய்துக்கொண்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் அவருக்கு ஏற்பட்ட காயம் எந்த காயம் என சான்று அளிக்கமுடியவில்லை. நான் அவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு அசா.ஆ.3 என்றும், இந்த வழக்கு சம்மந்தமாகபோலிஸார் என்னை விசாரணைசெய்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

ஏ ) அ.சா.8 கலியமூர்த்தி உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 21.01.2023-ம் தேதி ராமநத்தம் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 -ஐ விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று 16.30 மணியளவில் நிலையம் வந்து குற்ற எண். 20/2023 ச.பி. 294(பி), 323, 506(1) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், புகாரையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார் என்றும், அன்றைய தினமே காலை 17.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாண்டியன், ராஜமாணிக்கம்

ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம், அ.சா.ஆ.6 பார்வை மகஜர் தயார்செய்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சாட்சிகள் லட்சுமி, ரஞ்சிதா, சுமதி, பொன்னம்மாள், பாண்டியன், ராஜமாணிக்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்தபோது சம்பவம் உண்மை என தெரிந்ததால் எதிரியை தேடியபோது எதிரி மாண்பமை கடலூர் மாவட்டட முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுச்சென்றுள்ளார் என்றும், அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த உதவி மருத்துவர் திரு. அய்யப்பன் என்பவரை விசாரித்து அவர் அளித்த விபத்து பதிவேட்டை பெற்று பின்னர் எதிரி மீது ச.பி. 294(பி), 323, 506(1) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் தொல்லைத் தடுப்புச்சட்டத்தின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியமளித்துள்ளார்.

**8. கு.வி.மு.ச.பிரிவு 313 (i)(b)-ன் கீழ் வினா**

அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் விசாரணை முடிக்கப்பட்டு எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச..பிரிவு 313(i)(b)- -ன் கீழ் வினவியபோது எதிரி தம் மீதான குற்றமுறு சாட்சியங்களையும். சூழ்நிலைகளையும் மறுத்து அவை பொய் சாட்சியம் எனவும், வழக்கினை பொய் வழக்கு எனவும் கூறினார். மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனக் கூறியதால் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

**<u>9) தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை</u>**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவெனில், இவ் வழக்கில் எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் தொல்லைத் தடுப்புச்சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுக்களையும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், சான்றாவணங்கள் ஆகியவற்றின் மூலம் எந்தவிதமான ஐயங்களுக்கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டனவா? என்பதேயாகும்.

**<u>விவாதம்</u>**

10) இவ்வழக்கில் கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர், அ.சா.1 முதல் அ.சா. 8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் தாக்கல் செய்து எதிரி மீதான குற்றங்கள் அரசுதரப்பில் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை அளிக்க வேண்டுமாய் வாதிட்டார்.

11) கற்றறிந்த எதிரி தரப்பு வழக்குரைஞர் அரசுத்தரப்பு வாதத்தினை மறுத்தும் இவ்வழக்கில் சம்பவம் குறித்து அரசுத் தரப்பு சாட்சிகள் முரண்பாடாக சாட்சியமளித்து உள்ளார்கள் என்றும், வாய்மொழி சாட்சியத்திற்கும் அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப் பட்ட ஆவணங்களுக்கும் முரண்பாடுகள் காணப்படுவதால் எழும் ஐயத்தின் பலனை எதிரிகளுக்கே அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமாய் வாதிட்டார்.

**தீர்வு**

**12) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 294(பி) -ன் கீழான குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்டுள்ளதா என்பதை பார்க்கும் பொழுது**

இவ்வழக்கில் எதிரி, புகார்தாரரான லட்சுமியைப் பார்த்து "ஏய் புண்டே, ஏன் இங்கே நிற்கிறாய்" என்று பொது இடத்தில் ஆபாசமான மற்றும் அருவருப்பூட்டும் வார்த்தைகளால் திட்டியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டை அரசு தரப்பினர் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளனரா என்பதை இந்நீதிமன்றம் ஆராய்ந்தது. புகார்தாரரான அ.சா.1 தனது முதல்விசாரணையில், முதல் எதிரி தன்னைப் பார்த்து "உனக்கு எங்கடி சொத்து போட்டு நோட்டுது" என்று பேசியதாகவும், அதனால் தனக்கு ஒரு மாதிரியாகி நெஞ்சு படபடப்பு ஏற்பட்டதாகவும், பின்னர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால் குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள "ஏய் புண்டே, ஏன் இங்கே நிற்கிறாய்" என்ற வார்த்தையை அவர் தனது முதல்விசாரணையில் எங்கும் கூறவில்லை. பின்னர் அ.சா.1 அரசு தரப்பினரால் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படும்போது, காவல்துறையினரிடம் முதல் எதிரி தன்னை "தேவிடியா, குச்சிக்காரி" என்று திட்டியதாக கூறியிருந்தால் அது சரிதான் என்று தெரிவித்தார். எனினும், அந்த வார்த்தைகளும் குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தைகளுடன் ஒத்துப்போகவில்லை.

12.2. அ.சா.2 தனது முதல்விசாரணையில், முதல் எதிரி தனது மாமியாரான அ.சா.1-ஐ "தேவிடியா, குச்சிக்காரி" என்று திட்டியதாக கூறியுள்ளார். அவரும் குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ள "ஏய் புண்டே" என்ற வார்த்தையைப் பற்றி எதுவும் சாட்சியமளிக்கவில்லை. மேலும், அ.சா.2 என்பது அ.சா.1-ன் மருமகள் என்பது சாட்சியங்களின் மூலம் தெரியவருகிறது. அ.சா.3 தனது முதல்விசாரணையில் ஆபாச வார்த்தைகள் குறித்து எதுவும் கூறவில்லை. பின்னர் அ.சா.3 அரசு தரப்பினரால் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படும்போது, காவல் விசாரணையில் முதல் எதிரி அ.சா.1-ஐ "தேவிடியா, குச்சிக்காரி" என்று திட்டியதாக கூறியிருந்தால் அது சரிதான் என தெரிவித்துள்ளாரே தவிர, சம்பவத்தின் போது முதல் எதிரி அவ்வாறான வார்த்தைகளைப் பயன்படுத்தியதை உறுதியாக சாட்சியமளிக்கவில்லை. அ.சா.4 தனது முதல்விசாரணையில் ஆபாச வார்த்தைகள் குறித்து எதுவும் கூறவில்லை. பின்னர் அ.சா.4 அரசு தரப்பினரால் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படும்போது, காவல் விசாரணையில் அவ்வாறு கூறியிருந்தால் சரியல்ல என்று மறுத்துள்ளார். ஆகவே, குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஆபாச வார்த்தைகள் குறித்து அரசு தரப்புச் சாட்சிகளின் வாக்குமூலங்களில் கணிசமான முரண்பாடுகள் காணப்படுகின்றன. குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள "ஏய் புண்டே, ஏன் இங்கே நிற்கிறாய்" என்ற குறிப்பிட்ட வார்த்தைகளை எந்த ஒரு சாட்சியும் நீதிமன்றத்தில் உறுதியாக கூறவில்லை.

மேலும், அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகிய சுயாதீன சாட்சிகளின் சாட்சியங்களையும் ஆராயும்போது, அ.சா.3 தனது முதல்விசாரணையில் ஆபாசமாக திட்டியதைப் பற்றி எதுவும் கூறாமல், பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பினரால் குறுக்கு விசாரணை செய்யப்படும்போது காவல் துறையினர் விசாரணையில் அவ்வாறு கூறியுள்ளேனா என்றால் சரிதான் என்று மட்டுமே தெரிவித்துள்ளதைக் காண முடிகிறது. அ.சா.4 அதனையும் ஏற்காமல் மறுத்துள்ளார். எனவே, ஆபாசமாக திட்டியதாக கூறப்படும் நிகழ்வு சுயாதீன சாட்சிகளின் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை.

12.3. மேலும், இ.த.ச. 294(b)-இன் கீழ் குற்றம் அமைய, ஆபாசமான வார்த்தைகள் பொது இடத்தில் உச்சரிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அதனால் பிறருக்கு அருவருப்பு, எரிச்சல் அல்லது தொந்தரவு (annoyance) ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அ.சா.1 உட்பட எந்த ஒரு சாட்சியும், எதிரி பயன்படுத்தியதாகக் கூறப்படும் வார்த்தைகளால் தமக்கு அருவருப்பு, எரிச்சல், அசிங்க உணர்வு அல்லது தொந்தரவு ஏற்பட்டதாக சாட்சியமளிக்கவில்லை. அ.சா.1 தனக்கு நெஞ்சு படபடப்பு ஏற்பட்டதாக மட்டுமே கூறியுள்ளார். ஆகவே, இ.த.ச. 294(b)-இன் அத்தியாவசிய கூறுகளான (i) குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ள ஆபாச வார்த்தைகளின் பயன்பாடு மற்றும் (ii) அதனால் பிறருக்கு ஏற்பட்ட அருவருப்பு அல்லது தொந்தரவு ஆகியவற்றை அரசு தரப்பினர் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கத் தவறியுள்ளனர். எனவே, முதல் எதிரி

மீதான இ.த.ச. 294(b) குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 506(1) -ன் கீழான குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்டுள்ளதா என்பதை பார்க்கும் பொழுது**

13.1. இவ்வழக்கின் எதிரியானவர் புகார்தாரரையும் அ.சா.2 ரஞ்சிதாவையும் பார்த்து "உங்களை வெட்டி இங்கேயே பொதைத்துவிடுவேன்" என்று கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளாரா என்பதை பரிசீலிக்கையில், புகார்தாரரான அ.சா.1 தனது முதல்விசாரணையில் சம்பவம் தொடர்பாக சாட்சியமளித்துள்ள போதிலும், ஆஜர் எதிரி தன்னை மிரட்டியதாகவோ அல்லது "உங்களை வெட்டி இங்கேயே பொதைத்துவிடுவேன்" என்று கூறியதாகவோ எந்த இடத்திலும் சாட்சியமளிக்கவில்லை.பின்னர் அ.சா.1 அரசு தரப்பினரால் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படும்போது, "உங்களை வெட்டி இந்த இடத்தில் பொதைத்துவிடுவேன்" என்று எதிரி கூறியதாக காவல்துறையினரிடம் வாக்குமூலம் அளித்திருந்தால் அது சரிதான் என்று மட்டுமே தெரிவித்துள்ளார். ஆனால் சம்பவத்தின் போது எதிரி உண்மையில் அவ்வாறு மிரட்டியதாக அவர் உறுதியாக சாட்சியமளிக்கவில்லை. அ.சா.2 தனது முதல்விசாரணையில் ஆஜர் எதிரி மிரட்டியதாக எந்த இடத்திலும் கூறவில்லை. பின்னர் அரசு தரப்பினரால் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படும்போது, "உங்களை

வெட்டி இந்த இடத்தில் பொதைத்துவிடுவேன்" என்று எதிரி கூறியதாக காவல்துறையினரிடம் வாக்குமூலம் அளித்திருந்தேன் என்றால் அது சரிதான் என்று தெரிவித்துள்ளாரே தவிர, எதிரி உண்மையில் அவ்வாறு மிரட்டியதாக உறுதியாக சாட்சியமளிக்கவில்லை. அ.சா.3 தனது முதல்விசாரணையில் ஆஜர் எதிரி மிரட்டியதாக எதுவும் கூறவில்லை. பின்னர் அரசு தரப்பினரால் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படும்போது, "இங்கேயே பொதைத்துவிடுவேன்" என்று எதிரி மிரட்டியதாக காவல்துறையினரிடம் கூறியிருந்தேனா என்றால் அது சரிதான் என்று தெரிவித்துள்ளார். ஆனால் அவரும் எதிரி உண்மையில் அவ்வாறு மிரட்டியதாக நேரடியாக சாட்சியமளிக்கவில்லை.

13.2. அ.சா.4 தனது முதல்விசாரணையில் ஆஜர் எதிரி மிரட்டியதாக எதுவும் கூறவில்லை. பின்னர் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பினரால் குறுக்கு விசாரணை செய்யப்படும்போது, "இங்கேயே பொதைத்துவிடுவேன்" என்று எதிரி மிரட்டியதாக காவல்துறையினரிடம் கூறியிருந்தால் சரியல்ல என்று தெரிவித்துள்ளார். ஆகவே, இவ்வழக்கின் முக்கிய சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.4 வரை யாரும் தங்களது முதல்விசாரணையில் ஆஜர் எதிரி கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியமளிக்கவில்லை. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக நடத்தப்பட்ட பின்னரே, காவல்துறையினரிடம் அவ்வாறு கூறியிருந்தால் சரிதான் என்று தெரிவித்துள்ளனர். இத்தகைய சாட்சியம்

சம்பவத்தை நேரடியாக உறுதிப்படுத்தும் சாட்சியமாக கருத இயலாது. மேலும், இ.த.ச. 506(i) குற்றம் அமைய வெறும் மிரட்டல் வார்த்தைகள் கூறப்பட்டதாக மட்டும் இருப்பது போதுமானதல்ல. அந்த மிரட்டலின் காரணமாக பாதிக்கப்பட்டவரின் மனதில் உடனடியான அச்சம், பயம் அல்லது அபாய உணர்வு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அ.சா.1 உட்பட எந்த ஒரு சாட்சியும் எதிரி விடுத்ததாகக் கூறப்படும் மிரட்டலால் தமக்கு அச்சம், பயம் அல்லது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற உணர்வு ஏற்பட்டதாக சாட்சியமளிக்கவில்லை. எனவே, இ.த.ச. 506(i)-இன் அத்தியாவசிய கூறுகளான (i) மிரட்டல் விடுத்த செயல் மற்றும் (ii) அதனால் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட அச்சம் அல்லது பயம் ஆகியவற்றை அரசு தரப்பினர் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கத் தவறியுள்ளனர். ஆகையால், எதிரி மீதான இ.த.ச. 506(i) குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் தொந்தரவு தடுப்புச் சட்டம், 2002, பிரிவு 4 -ன் கீழான குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்டுள்ளதா என்பதை பார்க்கும் பொழுது

14.1) இ.த.ச. 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் தொந்தரவு தடுப்புச் சட்டம், 2002, பிரிவு4 ஆகிய குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளனவா என்பதை பரிசீலிக்கையில், இவ்வழக்கில், ஆஜர் எதிரி மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்து பு.சா.1 லட்சுமியின்

வலது கால்பாதத்தில் மோதியும், பின்னர் அவரது வலது கண்ணில் ஓங்கி அறைந்து காயம் ஏற்படுத்தியும், பெண்மையை அவமதிக்கும் வகையில் தொந்தரவு செய்த தாகவும் அரசு தரப்பின் வழக்கு அமைந்துள்ளது. அ.சா.1 தனது முதல்விசாரணையில், ஆஜர் எதிரி தனது வலது கண்ணில் அடித்ததாகவும், பின்னர் அதற்காக அறுவை சிகிச்சை மேற்கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால், ஆஜர் எதிரி மோட்டார் சைக்கிளில் வந்து தனது கால்பாதத்தில் மோதியதாக அவர் முதல்விசாரணையில் எங்கும் கூறவில்லை. பின்னர் அரசு தரப்பினரால் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படும்போது, ஆஜர் எதிரி மோட்டார் சைக்கிளில் வந்து தனது கால்பாதத்தில் மோதியதாக காவல்துறையினரிடம் வாக்குமூலம் அளித்திருந்தால் அது சரிதான் என்று மட்டுமே தெரிவித்துள்ளார். ஆனால் சம்பவம் உண்மையில் அவ்வாறு நடைபெற்றதாக உறுதியாக சாட்சியமளிக்கவில்லை.

14.2) அ.சா.2 தனது முதல்விசாரணையில், ஆஜர் எதிரி அ.சா.1-ன் காலில் பைக்கால் இடித்ததாக கூறியுள்ளார். ஆனால் அ.சா.3 தனது முதல்விசாரணையில், தான் சம்பவ இடத்திற்கு சென்றபோது எதிரி ரஞ்சிதாவை அடித்துக் கொண்டிருந்தார் என்று மட்டுமே கூறியுள்ளார். அ.சா.1-ன் காலில் மோட்டார் சைக்கிள் மோதியதாகவோ அல்லது அவரது வலது கண்ணில் அடித்ததாகவோ கூறவில்லை. பின்னர் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு, காவல்துறையினரிடம் அவ்வாறு

கூறியிருந்தால் அது சரிதான் என்று மட்டுமே தெரிவித்துள்ளார். அ.சா.4 தனது முதல்விசாரணையில், அ.சா.1 மற்றும் எதிரிக்கிடையே சண்டை நடைபெற்றதாகவும், அதனை தான் விலக்கிவிட்டதாகவும், வேறு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். பின்னர் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபொழுதும் அரசுத்தரப்பின் வழக்கை உறுதிப்படுத்தவில்லை. மேலும், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தான் கையொப்பமிட்ட புகார் மற்றும் வாக்குமூலத்தில் என்ன கூறப்பட்டிருந்தது என்பதை தெளிவாக கூற முடியாது என்றால் சரிதான் என்று தெரிவித்துள்ளார். இதனால், புகாரின் உள்ளடக்கம் தொடர்பாகவே அ.சா.1 உறுதியான நிலையில் இல்லை என்பது தெரியவருகிறது. மேலும், அ.சா.1 தனது முதல்விசாரணையில், தன்னுடைய குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் கடந்த 8 ஆண்டுகளாக இடம் தொடர்பான தகராறு இருந்து வருவதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

14.3) அ.சா.2 என்பவர் பு.சா.1-ன் மருமகள் ஆவார். எனவே, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் ஆர்வமுள்ள சாட்சிகளாக இருப்பதால், அவர்களது சாட்சிகளை மிகுந்த கவனத்துடன் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும், அரசு தரப்பின் வழக்கின்படி சம்பவம் 19.01.2023 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்றதாக கூறப்படுகிறது. ஆனால் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தாம் மருத்துவ மனைக்கு சென்றது சுமார் மாலை 7.00 மணியளவில் இருக்கும் என்று

தெரிவித்துள்ளார். சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் நேரத்திற்கும் மருத்துவ மனைக்கு சென்ற நேரத்திற்கும் இடையே சுமார் 9 மணி நேரத்திற்கும் மேலான இடைவெளி காணப்படுகிறது. இத்தகைய காலதாமதத்திற்கு திருப்திகரமான விளக்கம் எதுவும் அரசு தரப்பினரால் அளிக்கப்படவில்லை. உடற்காயம் ஏற்பட்டதாக கூறப்படும் ஒரு நபர் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறாமல் நீண்ட நேரம் காலதாமதமாக மருத்துவமனை சென்றிருப்பது வழக்கின் உண்மைத்தன்மை குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

14.4) மேலும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 தனது முதல்விசாரணையில் சம்பவம் மாலை 4.00 மணியளவில் நடைபெற்றதாக கூறியுள்ளார். ஆனால் அரசு தரப்பின் வழக்கின்படி சம்பவம் காலை 10.00 மணியளவில் நடைபெற்றதாக கூறப் படுகிறது. எனவே, சம்பவ நேரம் தொடர்பாகவே அரசு தரப்புச் சாட்சிகளுக்கிடையே முரண்பாடு காணப்படுகிறது. மேலும், அரசு தரப்பின் வழக்கின்படி, ஆஜர் எதிரி மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்து அ.சா.1-ன் கால்பாதத்தில் மோதியதாக குற்றச் சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. எனினும், குற்றம் நிகழ்த்த பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் அந்த இருசக்கர வாகனம் காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்படவில்லை. அதனை நீதிமன்றத்தில் பொருள் சாட்சியாகவும் தாக்கல் செய்யவில்லை. அந்த வாகனத்தை குற்றத்துடன் இணைக்கும் எந்தவொரு பொருள் ஆதாரமும் அரசு தரப்பினரால் முன்வைக்கப்படவில்லை.

14.5) மேலும், அ.சா.7 மருத்துவர் தனது முதல்விசாரணையில், அ.சா.1 மேல்சிகிச்சை பெற்றதாக கூறப்பட்ட ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அதன் காரணமாக அ.சா.1-க்கு ஏற்பட்டதாக கூறப்படும் காயம் எவ்வகையான காயம் என்பதை தன்னால் உறுதியாக கூற முடியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.7 தனது குறுக்கு விசாரணையில், அ.சா.1-க்கு வெளிப்புற காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான் என்றும், இடது கையில் வலி என்பது நீண்ட நேரம் கையை தலைக்கு கீழ் வைத்து உறங்குவதாலும் ஏற்படலாம் என்றும், நெஞ்சு வலி என்பது படபடப்பு அல்லது மனஅழுத்தம் காரணமாகவும் ஏற்படலாம் என்றும், வயது முதிர்வு காரணமாக பார்வை மங்கலாக இருக்கவும் வாய்ப்பு உண்டு என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் ஆஜர் எதிரி அ.சா.1-ன் வலது கண்ணில் ஓங்கி அடித்ததாகவும், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்து அவரது வலது கால்பாதத்தில் மோதியதாகவும் குற்றச்சாட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரும் ஆஜர் எதிரி அ.சா.1-ஐ தாக்கியதாக சாட்சியமளித்துள்ளனர். எனினும், அ.சா.7 மருத்துவர் தனது குறுக்கு விசாரணையில், அ.சா.1-க்கு வெளிப்புற காயம் எதுவும் இல்லை என்று தெளிவாக சாட்சியமளித்துள்ளார். சாதாரணமாக ஒருவர் மற்றொருவரின் வலது கண்ணில் ஓங்கி அடித்தாலோ அல்லது மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்து கால்பாதத்தில் மோதினாலோ, குறைந்தபட்சம் வெளிப்புற காயம், வீக்கம், சிராய்ப்பு அல்லது

தாக்குதலுக்கான ஏதேனும் உடற்கூறு அடையாளம் காணப்படுவது இயல்பானதாகும். ஆனால் இவ்வழக்கில் அ.சா.1-க்கு அத்தகைய எந்தவொரு வெளிப்புற காயமும் இல்லை என்று மருத்துவ சாட்சியம் தெரிவிக்கிறது. எனவே, குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ள தாக்குதல் முறைக்கும் மருத்துவ ஆதாரத்திற்கும் இடையே ஒத்திசைவு இல்லை. குற்றச்சாட்டில் கூறப்பட்டவாறு சம்பவம் நடைபெற்றிருந்தால் வெளிப்புற காயம் ஏற்பட்டிருக்கும் என்ற இயல்பான எதிர்பார்ப்பிற்கு மாறாக, மருத்துவ ஆதாரத்தில் அவ்வாறான எந்தவொரு காயமும் காணப்படவில்லை. இந்நிலை அரசு தரப்பின் வழக்கின் நம்பகத்தன்மை மீது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

14.6) மேலும், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், மருத்துவமனையில் மருத்துவர் தன்னை விசாரிக்கவில்லை என்றும், தாம் பேசும் நிலையில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். ஆனால் அ.சா.ஆ.3 காயச்சான்றிதழில், 19.01.2023 அன்று காலை 10.00 மணியளவில் வீட்டருகே அடையாளம் தெரிந்த ஒரு ஆண் நபர் குச்சியால் தாக்கியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 மருத்துவரிடம் எந்த விவரமும் கூறவில்லை என்று கூறும் நிலையில், அ.சா.ஆ.3-ல் சம்பவ விவரங்கள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டன என்பது விளக்கப்படவில்லை. மேலும், அ.சா.ஆ.3 காயச்சான்றிதழில் அடையாளம் தெரிந்த ஒரு ஆண் நபர் குச்சியால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்வழக்கில் எந்த ஒரு சாட்சியும் குச்சியால்

தாக்கியதாக சாட்சியமளிக்கவில்லை. எனவே, வாய்மொழி சாட்சிகளுக்கும் மருத்துவ ஆவணங்களுக்கும் இடையே கணிசமான முரண்பாடு காணப்படுகிறது. அதேபோன்று, அ.சா.1 தனது வலது கண்ணில் அடிபட்டு அறுவை சிகிச்சை மேற்கொண்டதாக கூறியுள்ள போதிலும், அதனை உறுதிப்படுத்தும் எந்த மருத்துவ ஆவணமும் அல்லது மேல்சிகிச்சை பதிவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், புலன்விசாரணை அதிகாரியான அ.சா.8 தனது குறுக்கு விசாரணையில், அ.சா.1 மேல்சிகிச்சைக்காக செல்லவில்லை என்று தெரிவித்துள்ளார். இவ்விரு சாட்சியங்களும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. மேலும், பார்வையியல் மகசர் சாட்சியான அ.சா.5 தனது முதல்விசாரணையில், தாம் கையொப்பமிட்ட ஆவணத்தை படித்துப் பார்க்கவில்லை என்றும், காவல்துறையினர் தன்னை விசாரிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். அதேபோல், அ.சா.6 தனது முதல்விசாரணையில், தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வைல் மகசரில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், காவல்துறையினர் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். எனவே, பார்வை மகசரும் அரசு தரப்பின் புலன் விசாரணை சந்தேகத்திற்கு இடமளிக்கின்றன. மேலும், அ.சா.8 தனது குறுக்கு விசாரணையில், அ.சா.1-ஐ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக கூறப்படும் அவரது மருமகன் ராமமூர்த்தியை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியாக சேர்க்கவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

14.7) அ.சா.1-ஐ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற முக்கிய நபரான ராமமூர்த்தி விசாரிக்கப்படாதது அரசு தரப்பின் வழக்கில் முக்கிய குறையாகும். முக்கிய மான சாட்சியை விசாரிக்கத் தவறியது அரசு தரப்பின் வழக்கிற்கு பாதகமாக அமைகிறது. மேலும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை 21.01.2023 அன்று பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், இந்நீதிமன்றத்திற்கு 15.02.2023 அன்றுதான் சென்ற டைந்துள்ளது. இந்த அசாதாரணமான காலதாமதத்திற்கு அரசு தரப்பினர் எந்த விளக்கமும் அளிக்கவில்லை. மேற்கூறிய சூழ்நிலைகளில், அரசு தரப்பின் வாய்மொழி சாட்சியங்கள் மருத்துவ ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்படவில்லைஎன்பது தெளிவா கிறது. மாறாக, மருத்துவ ஆதாரங்களுக்கும் வாய்மொழி சாட்சிகளுக்கும் இடையே கணிசமான முரண்பாடுகள் காணப்படுகின்றன. குற்றவியல் வழக்கில் இத்தகைய முரண்பாடுகள் அரசு தரப்பின் வழக்கின் நம்பகத் தன்மையை கடுமையாக பாதிக்கின்றன. எனவே, ஆஜர் எதிரி அ.சா.1-க்கு காயம் ஏற்படுத்திய தாகவும், பெண்மையை அவமதிக்கும் வகையில் தொந்தரவு செய்ததாக வும் அரசு தரப்பினர் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கத் தவறியுள்ளனர். ஆகையால் ஆஜர் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 323 மற்றும் தமிழ்நாடு பெண்கள் தொந்தரவு தடுப்புச் சட்டம்- 2002 பிரிவு 4 ஆகிய குற்றச்சாட்டுகள் அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15) மேற்கூறிய அனைத்து சாட்சியங்கள், ஆவணங்கள் மற்றும் வழக்கின் மொத்த சூழ்நிலைகளையும் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்ததில், அரசு தரப்பின் வழக்கில் பல்வேறு முக்கியமான முரண்பாடுகள், விடுபாடுகள் மற்றும் சந்தேகங்கள் காணப்படுகின்றன. புகார்தாரரான அ.சா.1 மற்றும் அவருடைய உறவினரான அ.சா.2 ஆகியோரின் சாட்சிகள் மட்டுமே அரசு தரப்பின் வழக்கிற்கு ஆதாரமாக உள்ள நிலையில், சுயாதீன சாட்சிகள் அரசு தரப்பின் வழக்கை முழுமையாக ஆதரிக்கவில்லை. மேலும், ஆபாசமாக திட்டியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும், உடற்காயம் ஏற்படுத்தியதாகவும் கூறப்படும் சம்பவங்கள் குறித்து சாட்சிகளின் வாக்குமூலங்களில் கணிசமான முரண்பாடுகள் காணப்படு கின்றன. அதேபோன்று, வாய்மொழி சாட்சியங்களுக்கும் மருத்துவ ஆதாரங்களுக்கும் இடையே ஒத்திசைவு இல்லை. மருத்துவ ஆதாரங்கள் அரசு தரப்பின் வழக்கை உறுதிப்படுத்தவில்லை. குற்றம் புரிவதற்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்படாததும், முக்கிய சாட்சிகள் விசாரிக்கப்படாததும், மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாததும், முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்புவதில் ஏற்பட்ட விளக்கமற்ற காலதாமதமும் அரசு தரப்பின் வழக்கின் நம்பகத்தன்மையை மேலும் பாதிக்கின்றன.

16) குற்றவியல் வழக்கில் குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் பொறுப்பு முழுமையாக அரசு தரப்பின் மீதே உள்ளது. ஆனால்

இவ்வழக்கில் அரசு தரப்பினர் தங்களது வழக்கை அவ்வாறு நிரூபிக்கத் தவறியுள்ளனர். இவ்வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்கள் சாதாரணமானவையோ அல்லது அற்பமானவையோ அல்ல; மாறாக, வழக்கின் அடிப்படை உண்மைத்தன்மையையே பாதிக்கும் வகையிலான நியாயமான சந்தேகங்களாக உள்ளன. எனவே, இவ்வழக்கில் எழுந்துள்ள நியாயமான சந்தேகங்களின் பலன் ஆஜர் எதிரிக்கே வழங்கப்பட வேண்டும் என்பது குற்றவியல் சட்டத்தின் நிலையான கோட்பாடாகும். அதன்படி, அரசு தரப்பினர் ஆஜர் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. 294(b), 323, 506(i) மற்றும் தமிழ்நாடு பெண்கள் தொந்தரவு தடுப்புச் சட்டம், 2002, பிரிவு 4 ஆகிய குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கத் தவறியுள்ளதால், ஆஜர் எதிரி மேற்கண்ட அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி விடுதலை செய்யப்படுகிறார்.

**16) முடிவாக**

அ) **இவ்வழக்கின்** பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் தொல்லைத் தடுப்புச்சட்டம் மற்றும் பிரிவுகள் 294(பி), 323, 506(1) இதசவின் படி **குற்றவாளி இல்லையென தீர்வு கண்டதால் எதிரியை** கு.வி.மு.ச. பிரிவு 248(1)-**ன் கீழ் இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

ஆ) இவ்வழக்கில் உத்திரவிடுவதற்கான வழக்கு சொத்து எதுவுமில்லை.

இ) எதிரிகள் மீதான பிணை முறி பத்திரங்களை மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்திரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து பார்த்து, பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 25-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ASIF MOHAMED M Digitally signed by ASIF MOHAMED M Date: 2026.06.25 17:15:24 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
திட்டக்குடி

**<u>இணைப்பு:</u>**

**<u>1) அரசுத்தரப்பு சாட்சிகள்:</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. லட்சுமி |
| அ.சா.2 | திருமதி. ரஞ்சிதா |
| அ.சா. 3 | திருமதி. சுமதி |
| அ.சா.4 | திருமதி. பொன்னம்மாள் |
| அ.சா.5 | திரு. பாண்டியன் |
| அ.சா.6 | திரு. ராஜமாணிக்கம் |
| அ.சா.7 | திரு. அய்யப்பன் - மருத்துவர் |
| அ.சா.8 | திரு. கலியமூர்த்தி - உதவி ஆய்வாளர் |

**<u>2) அரசுத்தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 20.01.2023 | புகார் |
| அ.சா.ஆ.2 | 21.01.2023 | பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 19.01.2023 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.4 | 21.01.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அசா.அ.5 | 21.01.2023 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 21.01.2023 | மாதிரி வரைபடம் |

**<u>3) அரசுத்தரப்பு சான்றுப்பொருள் . இல்லை</u>**

**<u>4) எதிரி தரப்பு சாட்சி , சான்றாவணம் மற்றும் சான்று பொருள் . இல்லை.</u>**

ASIF MOHAMED M

Digitally signed by ASIF MOHAMED M
Date: 2026.06.25 17:15:32 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்

திட்டக்குடி

**<u>குறிப்பு :</u>**

1) எதிரி விடுதலை செய்யப்பட்டார். எதிரி விசாரணை காலத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

2) வழக்கு முடிவின் விபரம் தக்க காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

3) வழக்கின் விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**<u>நகல் :</u>** மாண்பமை கடலூர் மாவட்ட தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.